பல பொருட்களின்
காட்சிக் கலைக்கூடம்...
- மணிக்கூடுகள்
- நீரிறைக்கும் யந்திரங்கள்
- ஈஸ்டன் சைக்கிள்கள்
- பாதணிகள், பாத்திரங்கள்
- பாவனைப்பொருட்கள்
- விளையாட்டுச் சாமான்கள்

அனைத்தும் சகாய விலை
சி. சின்னத்துரை
அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 ஆனி: 31 ஷஃபா: 8 இதழ்: 154
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15-7-78

பாவித்த நைலோன்
வலைகளும்,
பேர்கின்ஸ் P3
என்ஜின்களும்
விற்பனைக்குண்டு
அ. சி.
விஷ்ணுசுந்தரம்
65, யாழ்ப்பாண வீதி
வல்வெட்டித்துறை
டெலிபோன்: 08

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1978-7-17
PERIODICALS DIVISION

அந்நிய மாவை விடுத்து உள்ளூர்

# அரிசி உணவு உண்ணும் யுகம் உருவாக்க ஜேனி சங்கல்பம்

## பேரவையில் கம்பஹா எம்.பி.யின் கேள்விக்கு பதில்

(கொழும்பு)

"வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் மாவை உணவாக உண்பதை விடுத்து நம்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப்பொருட்களையே நமது மக்கள் உண்ணும் புதிய யுகம் ஒன்றை நாம் உருவாக்கத் தீர்மானித்துள்ளோம். இதற்கு நாட்டுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும்"

இவ்வாறு நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ஜேனி டி மெல் நேற்று தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தார். ஒத்திவைப்புப் பிரேரணையின் போது கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே திரு. மெல் மேற்கண்டவாறு கூறினார்.

இன்றைய அரசு பதவிக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள் பங்கீட்டு அரிசியை ரத்துச் செய்ததுடன் மா, பசளை சீமெந்து ஆகிய வற்றின் விலையையும் பஸ் கட்டணங்களையும் அரசு அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர் என்று திரு. பண்டாரநாயக்கா கூறினார்.

திரு.ஜேனி டி. மெல் பேரவையில் மேலும் கூறியதாவது:-

மேற்கு நாடுகளில் தோன்றியுள்ள முதலாளித்துவ நெருக்கடி காரணமாகவும் உலகச் சந்தையில் பொருட்களின் விலை அதிகரித்தமையினாலுமே இலங்கையில்' இப் பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இலங்கையில் மட்டுமல்ல, செக்கோஸ்லவாக்கியா, சீனா, போலந்து ஆகிய நாடுகளிலும் இதேநிலைதான் இன்று ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டு மக்கள் அமெரிக்க ஆஸ்திரேலிய விவசாயிகளை கொழுக்கவைப்பதை விடுத்து எமது நாட்டு விவசாயிகளை சொளுக்கவைப்பதுடன் எமது நாட்டின் பொரு

[6-ம் பக்கம் பார்க்க]

## அரசியல் அமைப்புத் திட்டம் ஜூலை 25-ல் பேரவைக்குவரும்

### ஆகஸ்ட் 2-ல் விவாதம்

[கொழும்பு]

வரைவு அரசியல் அமைப்புத் திட்டம் இம்மாதம் 25 ம் திகதி தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது

இதன் மீதான விவாதம் ஆகஸ்ட்மாதம் 2ம் திகதி பேரவையில் ஆரம்பமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்விவாதத்தில் கலந்து கொள்வதா இல்லையா என்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கவில்லை. இதேவேளையில் வரைவு அரசியல் அமைப்புத்திட்டத்தின் ஒரு பகுதியான அரசியல் அமைப்பு நீதிமன்றத்தை ரத்துச் செய்வது தொடர்பான விவாதம் நடைபெறும் போது அதில் கலந்து கொள்வதில்லை என்று தமிழர் கூட்டணி தீர்மானித்துள்ளது. (ம-இ)

## ஜே. ஆர். இன்று திருமலை விஜயம்

[திருக்கோணமலை]

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இன்று 2 நாள் விஜயத்தை மேற்கொண்டு திருக்கோணமலைக்கு விஜயம் செய்கிறார்.

இன்று காலை திருமலை கச்சேரியில் நடைபெறும் விசேட மகாநாட்டில் திரு. ஜே. ஆர், கலந்துகொள்வார்.

திருக்கோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி இம் மகாநாட்டில் ஆராயப்படும், (இ)

## தலைவர் நல்லூர் சிவா; செயலதிபர் அமிர் - உறுதி

### ஏகமனதானதெரிவு நிச்சயம்

### ஜெயக்கொடியின் மனுவில் தவறு?

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக நல்லூர் எம். பி. யும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் இன்று நடைபெறும் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படலாமென்று அறியப்படுகிறது. தலைவர் பதவிக்கு முன்னாள் உடுப்பிட்டி எம். பி. யான திரு. கே. ஜெயக்கொடியின் பெயரும் பிரேரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாயினும் உரிய முறையில் அவர் பிரேரிக்கப்படவில்லை யென்ற ஒரு பிரச்னை எழலாமென்றும் இதனால் அவரது மனு நிராகரிக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

கூட்டணியின் புதிய அமைப்பு விதிகளின்படி ஒருதலைவரும் ஒரு செயலாளர் நாயகமுமே தெரிவுசெய்யப்பட வேண்டும். இதன்படி தேதி குறிப்பிட்டு தலைவர் பதவிக்கும், செயலாளர் நாயகத்தின் பதவிக்கும் மனுச்செய்ய வேண்டுமென்று அறிவிக்கப் பட்டிருந்தது.

இந்த அறிவித்தலின்படி

[6-ம் பக்கம் பார்க்க]

குடியுரிமை தடை மசோதா:

## பேரவையில் 20ம்- திகதி சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்றதாகக்கூறப்பட்ட ஊழல்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்டோரின் குடியுரிமையை ரத்துச்செய்வதற்கான மசோதா இன்று தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இம்மசோதா எதிர்வரும் 20-ம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் திரு ஆர். பிரேமதாஸ இன்று சபையில் அறிவித்தார். (உ)

## துப்பாக்கி முனையில் சிகரெட் வானைக் கடத்தி ரூபா 12 ஆயிரம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட சிகரட் வானிலிருந்து சுமார் 12 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று சங்கானையில் நேற்றுப் பகல் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கத்திற்குசொந்தமான சிகரெட்வான் ஒன்று நேற்று சங்கானை-மல்லாகம் வீதியில் உள்ள கடை ஒன்றில் 'சிகரெட்'விற்பனை செய்துவிட்டுப் புறப்பட்டபோது இனந்தெரியாத நான்கு பேரினால் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டு இப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாசாலைக்கு அண்மையில் உள்ள கடை ஒன்றில் விற்பனையை முடித்துக் கொண்டு புறப்பட்ட குறிப்பிட்ட வானைச் சூழ்ந்து கொண்ட நால்வரும் வானில் இருந்தவர்களை வெளியே தள்ளிவிட்டு வானை அங்கிருந்து ஒழுங்கைக்கூடாகக் கடத்திச்சென்று பணத்தைக் கொள்ளையடித்த பின்னர்

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

ஸ்ருடியோ, ஆர்ட்டிங் வேலைகளில் பழகுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர்கள் உடனடியாகத் தேவை. 25-7-78க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9818, c/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம் 9818

யாழ்ப்பாணம் பஸ் நிலையம் சந்தை ஆகியவற்றிக்கு அண்மையில் ஒரு கடை தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 9795 C/o ஈழநாடு - யாழ்ப்பாணம். 9795

பரந்தன் கிளிநொச்சி டவுன் பகுதியில் தண்ணீர் வசதியுடன் ஒரு கடை தேவை. விபரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 9808, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9808

சமையற்காரரும், சப்ளை செய்வோரும் உடனடியாகத் தேவை, நேரில் வரவும். காந்தன்கூல்பார் அன்கபே, 52, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 9727

யாழ்ப்பாணத்திலிருந்து 5 மைல் சுற்றுவட்டாரத்துக்குள் 8-10 ஏக்கர் காணி அவசரமாகத் தேவை. தொடர்பு: 5 1/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 9788

### விற்பனைக்கு

பாவித்துக் கழித்த 45 கலன் றம்களும், 4 கலன் டின்களும் விற்பனைக்குண்டு. வேலை நேரத்தில் மட்டும் பார்வையிடலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 9812

டொஜ் லொறி CY 6445 அரை பொடியுடன் நல்ல நிலையில். விபரம்: ஜாப்னு மோட்டோர்ஸ், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 9826

இயக்கச்சி-கோயில் வயல், பஸ்வீதியில் 2-ம்கட்டையில் 50 ஏக்கர் தென்னங்காணி பங்களா மேற்பார்வையாளர் வீடு, தொழிலாளர் குடிசைகள் முதலியசகலவசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. க. தருமரத்தினம், இல. 12, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 9793

## அறிவித்தல்

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய அதிர்ஷ்ட லாபச் சீட்டு முடிவுகள்

1. வே. கந்தசாமி - மாதகல் இல. 8109.
2. கு. இரகுராமன் - அளவெட்டி இல. 566.
3. எஸ். ஆர். உலகநாதன் - சித்தன்கேணி இல. 3141.
4. ஜே. தி. கண்ணன் - ஒட்டிசுட்டான் இல. 6055.
5. நா. தனபூபதி - அளவெட்டி இல. 5164.
6. எஸ். பி. இராணி- இல. 5937.
7. கோ. வாசுகி - அளவெட்டி இல. 159.
8. வி. திருநாவுக்கரசு-அளவெட்டி இல. 4128.
9. வி. திருநாவுக்கரசு - அளவெட்டி இல. 4135
10. துரைசிங்கம் - நீர்வேலி இல. 6771.

பரிசில்களை உடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

9825

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சி பட்டண சபை

திருவையாறு 111 பகுதியிலுள்ள 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம் ஒழுங்கைகளை திருத்துவதற்கு கேள்விப்பத்திரங்கள் 31-7-78 முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒழுங்கைகள் ஒவ்வொன்றிற்கும் முறையே கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/-ம், கேள்விக் கட்டணப்பணம் ரூபா 50/-ம் செலுத்தி 28-7-78 பிற்பகல் 2-00 மணி வரை கேள்விப்பத்திரத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விசேட ஆணையாளர்,**
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி,
13-7-1978. 9824

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

இன்று
வரணியூரானின்
## அசட்டு மாப்பிள்ளை
### வீரசிங்கம் மண்டபம்
9814

---

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
பாடசாலை விட்டு விலகியோருக்கான
## பயிற்சி வகுப்புகள்

பின்வரும் பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதம் ஆரம்பமாக உள்ளன.

1. ஒட்டுதலும் பொருத்துதலும். (வெல்டிங் மின்சாரமும், வாயுவும்)
2. மின்னிணைப்பும் மின்சாரக் கருவிகள் திருத்துதலும்.
3. தையலும் உடை அமைத்தலும் (பெண்கள்)

விண்ணப்பதாரருக்கான கல்வித்தகைமைகள்
க. பொ. த. (சாதாரணம்) கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது வர்த்தகம் சித்தி தேவை.
விண்ணப்ப முடிவு திகதி: 22-7-78

9821 அதிபர்.

---

### சன்சோனி விசாரணை

# "மூவர் கற்பழித்தனர், அவமானத்தால் ஊரைவிட்டே வெளியேறினேன்"

## இளம்தாய் சாட்சியம்

(கண்டி)

"கலவரவேளைஎன்னை மூவர் கற்பழித்தனர். இந்த அவமானம் தாங்காமல் நான் தோட்டத்தைவிட்டுவெளியேறி தற்போது கொழும்பில் ஒரு வீட்டில் வேலைசெய்கிறேன்"

அம்பன்பிட்டிய தோட்ட வாசியான திருமதி பிலிப் ஜெபமாலை சாட்சியமளிக்கையில் சொன்னார்.

அவர் மேலும்கூறியதாவது: தொடந்தன்னை மண்டபத்தில் பாதுகாப்புக்காக நாம் தங்கியிருந்தபோது இராபத்து மணியளவில் பிரஸ்தாப மூவரும் வந்து என்னைப் பிடித்திழுத்தனர். என்தாயும் நானும் ஒன்றும் செய்யாதிர்கள் எனக் கதறினோம். அவர்கள் என்னைக் காட்டுக்குள் தூக்கிச் சென்றனர். அங்கு கோடரி, கத்திமுனையில் கற்பழித்தனர்.

கற்பழித்தவர்களைக் கைது செய்ததாகவோ வழக்குத் தாக்கல்செய்ததாகவோ எனக்குத் தெரியவில்லை. 30 வயதான எனக்கு மூன்று பிள்ளைகள் உண்டு என்றார். (உ)

## "கெஞ்சியும் கேட்கவில்லை"

(கண்டி)

"என்னை நால்வர் தூக்கிச் சென்று காட்டில்வைத்துக் கற்பழித்தனர். நான் கதறி, மன்றாடியும் அவர்கள்விடவில்லை. காட்டில் சுமார் ஒருமணித்தியாலம் மயங்கிக்கிடந்தேன்"

இவ்வாறு கேகாலைரோசைட் தோட்டத்தில் வசிக்கும் செல்வி கறுப்பன் கறுப்பாயி (22 வயது) சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: "சிங்கள மக்களை வெட்டிக் கொன்ற உங்களை சும்மாவிடமாட்டோம் எனக்கூறி என்னை இருவர் பிடித்திழுக்க மற்றுமிருவர் காட்டுக்குள் தூக்கிச் சென்று கற்பழித்தனர். கதறிக்கேட்டும் அவர்கள் விடவில்லை. சுமார் ஒரு மணித்தியாலம் நான் மயங்கி காட்டில் கிடந்தேன். என் தாயும், மாமாவும் என்னைக் காட்டில் கண்டுபிடித்தனர்.

வைத்தியசாலையில் நான்கு தினங்கள் இருந்தேன், பொலிசாருக்கு வாக்குமூலம் அளித்தேன்" என்றார். (உ)

---

மந்துவில் கொலைவழக்கு

## இருவருக்கு கடூழியச் சிறை

(யாழ்ப்பாணம்)

மந்துவில் சின்னத்தம்பி கிட்டிணனைக் கொலைசெய்த வழக்கில் நான்கு எதிரிகளில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர். இருவருக்கு கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது,

1976 ல் மேற்படி நபரை கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தவர்களில் பாலன் பொன்னன் பொன்னன் முருகன் ஆகிய இருவரும் விடுதலை செய்யப்பட்டு சின்னப்பொடி தங்கராசா பொன்னன் தங்கராசா ஆகியோருக்கு கைமோசக் கொலைக் குற்றங்சாட்டின் மீது தலா 2 வருடம் 5 வருடம் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்குவிசாரணை யாழ். மேல்நீதிமன்றத்தில் நடைபெற்றது. (ச)

---

உடுப்பிட்டி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## விளம்பரம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் 5,500 வெற்றுச் சாக்குகளும், 350 மாப் பைகளும் கேள்விப்பத்திரம்மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 20-7-78க்கு முன்னர் ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 22-7-78 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் 'பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ, கூ. சங்கம், வல்வெட்டித்துறை' என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
உடுப்பிட்டி ப. நோ. கூ.
சங்கம்,
9830 வல்வெட்டித்துறை.

---

## கதிர்காம அடியாருக்கு அன்னதானம்

(காலி)

காலி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய பரிபாலன சபை கதிர்காம திர்த்தத் தினத்தன்றும்அதற்கு அடுத்த நாளும் காலி சிவன் கோவில் மடத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும். தீர்த்தத்துக்கு முந்திய மூன்று தினங்களிலும் தேநீர் வழங்கப்படும்.

மேற்படி ஆலயபரிபாலன சபையின் நிருவாகசபைக்கூட்டம் கடந்தவாரம் நடைபெற்றபோது இம்முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இச்சபையினர் காலி சிவன் கோயில் மடத்தில் கதிர்காம உற்சவ காலத்தில் பதினைந்து தினங்களிலும் கதிர்காம முழுமையாக யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்கி வந்தனர் என்றும் கடந்த ஆகஸ்ட் கலவரம் காரணமாக முழுநாட்களிலும் அன்னதானம் வழங்க வசதிகள் குறைவாக இருப்பதினால் கடைசி இரண்டு தினங்களிலும் அன்னதானம் வழங்க சபை முடிவு செய்துள்ளதென்றும் நிர்வாக சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

---

## நீண்டதூர ரயில் நேரமாற்றங்கள்

(கொழும்பு)

கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு நீண்டதூர ரயில் சேவைகளில் சில நேரமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

37ம் இலக்க உத்தரதேவி கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை ரயில் முற்பகல் 11-50 மணிக்கு கோட்டையில் இருந்து புறப்படும்.

47 ம் இலக்க "ராஜரட்ட ரஜினி" கொழும்பு கோட்டை-வவனியா ரயில் மாலை 3-15 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும்.

வேறு சில நீண்ட தூர சேவைகளுப் மாற்றப்பட்டுள்ளன. (உ)

---

## மணல் ஏற்றுவதை தடைசெய்க

(வேலணை)

அல்லைப்பிட்டி கடற்கரைப் பகுதியில் மணல் ஏற்றுவதைத் தடைசெய்ய வேண்டும். என்று அல்லைப்பிட்டி கிராம அபிவிருத்திச்சங்கம் யாழ். அரசாங்க அதிபர் வேலணை உதவி அரசாங்க அதிபர் காவலூர் எம். பி. ஆகியோரை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

இம்மகஜரில் மண்ஏற்றுவதால் ஏற்படும் 'பாதிப்புகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. (உ)

---

## திருமுறை ஏடுகள் எழுந்தருளும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

சைவத் திருமுறை ஏடுகள் எழுந்தருளும் வைபவம் இன்று சனிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் ஆரம்பமாகி 20ம் திகதி வியாழக்கிழமை திருக்கேதீஸ்வரத்தில் நிறைவுபெறும்.

திருக்கேதீஸ்வரத்தில் திருமுறைஏடுகள் விசேஷ பூசை, விழா முதலிய அணிகளுடன் பூசிக்கப்படும். (இ)

---

## 'எமது காவல் தெய்வம்'

(சுழிபுரம்)

"எமது கஷ்டங்கள் நீங்க இறையருளும் இயற்கையுமே துணையாகும். இறைவனின் கட்டளையை பணியெனக் கொண்டு எமக்கு காவலராக விளங்குபவர்தான் வைரவக் கடவுள். வைரவரை வணங்கி துதிப்பதன் மூலம் அவரது காத்தல்தொண்டு எமக்கு எப்போதும் கிட்டுகின்றது"

இவ்வாறு பண்ணாகம் முறிவு நெறிவு வைத்தியரால் ஸ்தாபிக்கப்பட்ட சுழிபுரம் கிழக்கு நெல்லியான் வைரவ கோயில் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய ஆசிரியர் கேனு நடராசா குறிப்பிட்டார்.

இவ்வைபவத்திற்கு திரு. க. வாமதேவன் தலைமைவகித்தார். சுழிபுரம் பிரம்மஸ்ரீ ச. வரதராசாக்குருக்கள் கும்பாபிஷேக் கிரிகைகளை நிறைவேற்றிவைத்தார்.

---

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகாவித்தியாலய வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி வித்தியாலய அதிபர் திரு.என்.சண்முகரத்தினம் தலைமையில் இன்று நடைபெறவிருக்கிறது. வடபகுதி வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்கள் வழங்குவார்.

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஐயனார் கோவிலில் சாங்காபிஷேகம் இன்று நடைபெறுகிறது. பண்டிதை சி. பாலநாதன் 'அடியார் பெருமை' பற்றி சொற்பொழிவாற்றுவார்.

ஈழநாடு
The Eelanaadu

# தாக்குதல் சடுதியாக நடந்திருப்பதால் சாட்சிகள் விபரித்துக் கூறுவதுகஷ்டம்

## பிரதி வழக்குத் தொடுநர் தொகுப்புரை

(கொழும்பு)

[துரையப்பா கொலை வழக்கில், பிரதி வழக்குத் தொடுநர் திரு. கெனத் செனவிரத்ன, அரசதரப்பில் நிகழ்த்திய தொகுப்புரையின் முதற் பகுதி நேற்றைய 'ஈழநாடு' வில் வெளிவந்தது. மிகுதிப் பகுதி இன்று வெளிவருகிறது.]

''1-ம் எதிரி மற்ற எதிரிகளுடன்சேர்ந்து, துரையப்பாவைக் கொலைசெய்ய சதிசெய்தார். இக்கொலையில் 3 பேரும் சேர்ந்திருக்கிறார்கள். 3பேரும் அங்கு நின்றிருக்கிறார்கள் என்பதற்கு சாட்சியம் உண்டு. 2பேர் சுழல்துப்பாக்கியும், ஒருவர் கத்தியும் வைத்திருந்தனர். துரையப்பா காரிலிருந்து இறங்கிவரும்போது உடனே சுடப்பட்டார். துப்பாக்கி வைத்திருந்த 2 பேர் தான் அவரைசுட்டிருக்கலாம். துரையப்பாவின் மரணத்தை அந்த 3 பேரும் சேர்ந்து செய்திருக்கின்றனர். கொலைக்குற்றத்திற்கு அந்த 3 பேரும் பாத்திரவாளியாவார்கள். அந்த அடிப்படையில்தான் நான் இங்கு விளக்கமளிக்கின்றேன்.

### திட்டமிட்டு செய்திருக்கிறார்

''ஆகவே அறம்கூறும் அவையினரே; 1ம் எதிரி கலாபதி மற்ற 2 எதிரிகளுடன் சேர்ந்து திட்டமிட்டு இக்கொலையைச் செய்திருக்கிறார். அநேகமாக இவ்வழக்கில் 3 பேரும் சேர்ந்து சதிசெய்தார்கள் என்பதற்கு சாட்சியங்கள் கிடைப்பதில்லை. சதியில் சம்பந்தப்பட்டவர்கள் சாட்சியம் சொன்னால்தவிர வேறு வழியில்லை. சந்தர்ப்ப சூழ்நிலையில் இதனை ஆராய்ந்துபார்க்கும்போது ஒருமுடிவுக்கு வரமுடியும்.

''1ம் எதிரி உட்பட மூவரும் கோவிலில், துரையப்பா வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்கள் சாட்சியத்தின்படி 3 பேரும் ஆயுதம் வைத்திருந்தனர். இருவர் சுழல்துப்பாக்கியும் ஒருவர் கத்தியும் வைத்திருந்தார். ஆகவே 3 பேரும் அன்றுஅங்கு நின்றது துரையப்பாவை சுட்டுக் கொலைசெய்வதற்காகவே என்ற அனுமானத்திற்கு, சாட்சியத்தின்படி நீங்கள் வரவேண்டும். ஆலோசனை செய்யாமல், திட்டமில்லாமல், கோவிலில் காத்துநின்று சுட்டார்கள் என்று சொல்லமுடியாது.

### சூட்டுக் காயத்தை

''ஆகவே, துரையப்பாவை யார் திட்டமிட்டு கொலைசெய்திருக்கவேண்டும்? என்ற அனுமானத்திற்கு வரமுடியும். 3 பேரும் திட்டமிட்டு செய்தார்கள் என்ற முடிவுக்கு நீங்கள் வந்தால் யார் அந்த சூட்டுக்காயத்தை ஏற்படுத்தினார் என்ற முடிருக்குவரவேண்டும். சுட்டதுயார்? ஒருவர்தான் சுட்டதென்ற முடிவுக்கு வர முடியுமானால் அவர்தான் துரையப்பாவை சுட்டார் என்ற முடிவுசெய்யலாம். அது மட்டுமல்லாதுபொதுநோக்கம் இருந்தது என்ற முடிவுக்கும் வரக்கூடியதாக இருக்கும் இது பற்றிய சட்ட விளக்கங்களை, நீதிபதி தமது உரையில் உங்களுக்கு தெரிவிப்பார்.

''மூன்றுபேரில் ஒருவர், துரையப்பாவை கொலைசெய்தார் என்பதில் நீங்கள் திருப்திப்படவேண்டும். துரையப்பாவை கொலைசெய்ததுமூன்று பேரில் ஒருவர்தானென்றால், யார் செய்தார் என்பதை யிட்டு நீங்கள் அக்கறை கொள்ளத் தேவையில்லை. 1ம் எதிரி வந்து மற்றவர்களுடன் சேர்ந்து இக்கொலையைச் செய்தார் என்ற முடிவுக்கு நீங்கள் வரவேண்டும். அவர் சுட்டாரா? சுடவில்லையா? என்பது பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இந்த எதிரி தான் 3பேரில் ஒருவராக இருக்கிறார் என்று நியாயமான சந்தேகத்திற்கு அப்பாலான முடிவு எடுக்கவேண்டும்.

## துரையப்பா கொலைவழக்கு

### சிவனுவின் சாட்சியம்

''3 பேரும் சேர்ந்து செய்தார்கள் என்பதற்கு கார்ச் சாரதி சிவனுவின் சாட்சியம் இருக்கிறது. மூவருள் ஒருவராக 1ம் எதிரி அங்கு இருந்தார் என்பதுபற்றி நீங்கள் நியாயமான சந்தேகத்திற்கப் பால் தீர்மானிக்கவேண்டும்.

''அன்றுதுரையப்பா பொன்னாலை கோவிலுக்கு போயிருக்கிறார். காரில்போயிருக்கிறார். அங்கு அவர் சுடப்பட்டிருக்கிறார். துரையப்பா காரிலிருந்து இறங்கியபோது இருந்தாப்போல் திடீரென தாக்கப்பட்டுள்ளார். சடுதியாகஇருந்தாப்போல் நடக்கும் சம்பவத்தை விபரிக்கக்கூடிய நிலையில் சாட்சிகள் இல்லை.

''திடீரெனச் சுட்டார்கள், துரையப்பா கோவிலுக்குள் ஓடவில்லை. கார்நின்ற பக்கம் ஓடினார். தாக்குதலின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால், சடுதியாக நடந்திருப்பதால், அவற்றை சாட்சிகள் விபரித்து கூறுவது கஷ்டம் எனக் கூறுகிறேன்.

''எதிர்பாராமல் சம்பவம் நடக்கிறது. சாட்சியிடம் சம்பவம்பற்றி விபரமாக சொல்லும்படிகேட்டால் அது நியாயமானதா என்று உங்களை கேட்கிறேன்,

''துரையப்பா சுடப்படும் போது உள்ளேயிருந்தாரா? வெளியில் வந்தாரா? கார் கதவுடன் நின்றாரா? என்று நுணுக்கமாக ஒன்றையும் கூற முடியாது. ஏனெனில் எல்லாமே சடுதியாக 'திடீர் திடீர்' என்று சிலநிமிடங்களுக்குள் நடந்துமுடிந்துவிட்டது. சம்பவம் சொற்ப நேரத்தில் நடந்துள்ளது. 3 பேரும் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

பேரும் வந்தார்கள். அவர்களை அவர் காணக்கூடியதாக இருந்தாரா என்று கேட்கிறேன். கண்டதும் பின்னுக்கு திரும்பியிருப்பார், 'சூட்' என்ற சத்தம் கேட்டபோது திரும்பியிருப்பார்,சுடும்போது திரும்பியிருப்பார். ஆதலால் இதுபற்றி நுணுக்கமாக கூறுவது கஷ்டம், நீங்களே முடிவு செய்யவேண்டும்.

### பஸ்தியாம்பிள்ளை தலையில்...

'எல்லா விஷயமும் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை தலையில்போடப்பட்டது. பஸ்தியாம்பிள்ளை காயம் ஏற்படாமல் பைப்பினால் தாக்கினார் என்று சொல்லப் பட்டது. எதிரிகளை அடையாளம் காட்டிக் கொடுத்தார் என்றும், சாட்சியங்களை சொல்லிக் கொடுத்தார் என்றுகூறப் பட்டது. பஸ்தியாம்பிள்ளை சாட்சியங்களை தயாரித்து சாட்சிகளுக்கு வழங்கினார் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையை நான் இங்கு சாட்சியாக குறிப்பிடக்கூடிய நிலை இல்லை என்பது உங்களுக்கு தெரியும். அவர் சாட்சியாக இங்கு வந்திருந்தால், எல்லாம் அறிந்திருக்க முடியும்.

'1-ம் எதிரியை, பஸ்தியாம்பிள்ளை, சாரதி சிவனுக்கு அடையாளம் காட்டிக் கொடுத்தார் என்றால், 2-ம் எதிரியையும், சிவனுக்கு காட்டிக் கொடுத்திருப்பாரே. அப்படியானால் ஏன் சிவனுக்கு 2-ம் எதிரியைஅடையாளம் காட்டவில்லை.

'இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை பொறுப்பிலேயே 1-ம் 2-ம் எதிரிகள் இருந்தனர். இரண்டு பேரும் அடையாள அணிவகுப்பில் நின்றனர். ஆனால் சாரதி சிவனு 2-ம் எதிரியைஅடையாளம் காட்டவில்லை. 1-ம் எதிரியை பஸ்தியாம்பிள்ளை, சிவனுக்கு காட்டிக் கொடுத்தாரென்றால் 2-ம் எதிரியையும் அவர் காட்டிக் கொடுத்திருப்பாரே. ஏன் சிவனு 2-ம் எதிரியை காட்டவில்லை.

'1-ம் எதிரியை பஸ்தியாம்பிள்ளை சிவனுக்கு காட்டிக் கொடுத்திருந்தால், அடையாள அணிவகுப்பில் சிவனு முதலில் ஏன் தவறான ஆள் ஒருவரை அடையாளம்காட்டுவான். போனவுடனேயே 1-ம் எதிரியை அடையாளம் காட்டியிருக்கலாமே. ஆதலால் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளைதான் 1-ம் எதிரியை சாட்சிகளுக்கு காட்டிக் கொடுத்தார் என்ற முடிவுக்கு நீங்கள் வரக்கூடாது.

### 1-ம் எதிரி நின்றார்

அடையாள அணிவகுப்பில் 1-ம் எதிரியை அடையாளம் காட்ட சாட்சி யோகநாதன் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்தார். பஸ்தியாம்பிள்ளை காட்டிக் கொடுத்திருந்தால் போன உடனேயே 1-ம் எதிரியை அடையாளம் காட்டியிருப்பரே. சாட்சியங்களில் முரண்பாடு ஏற்படக்கூடும். ஆனால் சாட்சிகள் இருவரும் 1-ம் எதிரி கோவிலடியில் நின்றார் என்று கூறியிருக்கின்றார்கள். அடையாளமும் காட்டியிருக்கிறார்கள்.

'1-ம் எதிரி பின்பக்கத்தால் வந்து மோதினார் என்று யோகநாதன் கூறினார். காரின் பின்பக்கத்தால் திரும்பியிருந்தால், பின்பக்கத்திலேயே மோதியிருப்பார்.

### நுணுக்கமாக சொல்லமுடியாது

'காரிலிருந்து இறங்கி கோயிலுக்கு போக மடத்திலிருந்து வந்த 1-ம் எதிரி பின்பக்கத்தால் தானே மோதியிருக்க முடியும். முன் பக்கத்திலா, பின்பக்கத்திலா அந்தப்பக்கத்திலா. இந்தப் பக்கத்திலா என்று நுணுக்கமாக சொல்ல முடியாது. ஏனெனில் இது திடீரென நடந்த சம்பவம்.

'காரில் யோகநாதன் வந்தார். நாலுபேரும் ஒன்றாகத்தான் வந்தார்கள். கார்சாரதியும், வந்திருக்கிறார், இரு சாட்சிகளும் ஒன்றாக வந்திருக்கின்றனர். சாட்சியத்தை பொறுத்தவரை எல்லாம் திடீரென நடந்த சம்பவமாகும். ஆதலால் எப்படிப் பார்த்தார்கள் என்று சொல்ல முடியாது. 'சூட்' சூட் என்றதும், கடையைப் பார்த்துக் கொண்டு முன்னால் நின்றீரா என்று கூறமுடியாது இவை சாட்சிகளால் பதில் சொல்ல முடியாத கேள்விகளாகும்.

### அடையாளம் காட்டினார்கள்

'அறம்கூறும் அவையினரே துரையப்பாவுடன் ஒரே காரில் வந்த 2 பேரும் 1-ம் எதிரியை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டியிருக்கிறார்கள். 2 பேரும் உடனே பொலிஸில் வாக்குமூலமளித்திருக்கிறார்கள் பாதிருக்காவிடில் எதிரிகளை அடையாளம் காட்ட முடியாது என்று கூறியிருப்பார்கள். ஆதலால் நீங்கள்தான் இதுபற்றிய அனுமானத்திற்கு வரவேண்டும்.சாட்சிகள் பொலிஸாருக்கு மாறாக சொன்னதை நம்பப் போகிறீர்களா நீங்கள் தான் இதுபற்றி முடிவு செய்ய வேண்டும்.

எதிரிகளை அடையாளம் காட்ட முடியாதெனத் தான் பொலிஸிற்கு சொல்லவில்லை என சிவனு மறுத்திருக்கின்றார். இந்த நிலையில் சிவனுவின் சாட்சியத்தை ஏற்க வேண்டுமதா? இல்லையா? என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

### ஒருவரால்மட்டும் முடியும்

''இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளைதான் சாட்சியங்களைப் பதிவு செய்தார். ஆதலால் பஸ்தியாம்பிள்ளைக்குச சாட்சிகள் என்ன சொன்னார்கள் என்பதை யாரால் கூற முடியும்? அதனை பஸ்தியாம்பிள்ளை ஒருவரால்மட்டுமே கூறமுடியும். அவரை இங்கு சாட்சியாக அழைக்க முடியாத நிலைமை. பஸ்தியாம்பிள்ளை ஒருவர்மட்டும்தான், இவற்றைக் கூறமுடியும். மரண விசாரணையிலும் இவர்கள் சாட்சியமளித்திருக்கிறார்கள்.

''பொலிஸார் இவர்களை 'கிங்ஸ்கவுஸில்' வைத்திருந்தனர் எனக் கூறப்பட்டது. அவசரகாலச் சட்டத்தின்கீழ்தான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

''கலாபதி பொலிஸாரினால் தாக்கப்படவில்லை என நான் கூறவில்லை. கேள்வி என்னவென்றால் நிச்சயமாக அவர் தாக்கப்பட்டாரா என்பது தான். அதனை நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

### ஏன் 2ம் எதிரியை காட்டவில்லை

''பஸ்தியாம்பிள்ளை சாட்சி

(5-ம் பக்கம் பார்க்க)

---

## உபஉணவுப் பொருள்கள்

உபஉணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு காணி விவசாய அமைச்சர் வகுத்துள்ள ஒரு திட்டத்துக்கு அரசாங்கம் அங்கீகாரமளித்துள்ளது.

இத்திட்டத்தின்படி உப உணவுப் பொருள்களுக்கு ஒரே சீரான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படும். இப்பொருள்களை வாங்கிச் சேமித்து வைப்பதற்கு புதிதாக நாட்டின் பல பாகங்களிலும் களஞ்சியங்கள் அமைப்பதுடன் குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களும் அமைக்கப்படும். இதற்கென விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தும் சபையொன்று நிறுவப்படும்.

உற்பத்தி அதிகரிக்கும் காலத்தில் மிளகாய், வெங்காயம், சோளம், குரக்கன், உளுந்து, சோயா போன்ற உபஉணவுப் பொருள்கள் அனைத்தையும் இந்தச்சபை உத்தரவாத விலைக்குகொள்வனவு செய்து சேமித்து வைக்கும். இப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலத்தில் இப்பொருள்களை பொது மக்களுக்கு நியாயமான விலையில் வழங்கும்.

இப்பொழுது செத்தல் மிளகாய், சின்னவெங்காயம், சோளம், உளுந்து ஆகியவைகளின் விலை வெகுவாகக் குறைந்துள்ளது.

இதனால் உபஉணவுப் பொருள் உற்பத்தியிலீடுபட்ட விவசாயிகளுக்கு மனச்சோர்வு ஏற்பட்டிருக்கிறது.

வடபகுதி விவசாயிகளைப் பொறுத்தவரையில் காசுப் பயிர் என்று சொல்லப்படும் புகையிலைச் செய்கையில் தான் அதிகம் நாட்டம் கொண்டிருந்தனர்.

முன்னைய அரசாங்கங்கள் உபஉணவுப் பொருள்களின் இறக்குமதியைத் தடை செய்தன. இதனால் உள்நாட்டில் உப உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவே விவசாயிகள் இப்பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டனர்.

உள்நாட்டில் உபஉணவுப் பொருள்கள் உற்பத்தி செய்ததனால் வெளிநாட்டுச் செலாவணி மீதப்படுத்தப்பட்டதுடன் விவசாயிகளுக்கும், நல்ல வருமானம் கிடைத்தது. உபஉணவுப் பொருள்களின் தட்டுப்பாடும் நீங்கியதென்றே சொல்ல வேண்டும்.

உபஉணவுப் பொருள்கள் அமோகமாக விளைச்சல் காணும் காலத்தில் அவற்றை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்து சேமித்து வைத்து தட்டுப்பாடான காலத்தில் விநியோகம் செய்வதென இப்போது காணிவிவசாய அமைச்சர் கொண்டுவந்துள்ள திட்டத்தை முன்னைய அரசாங்கங்கள் முன்னரே செயல்படுத்தியிருந்தால் உபஉணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிராததுடன் மக்களின் செல்வாக்கையும் இழக்க வேண்டியேற்பட்டிராது.

இந்த நிலை இன்றைய அரசுக்கும் ஏற்படக்கூடாதென்பதற்காகவே சகல பொருள்களையும் அரசாங்கம் இறக்குமதி செய்வதற்கு அனுமதித்திருக்கிறது.

ஆனால் இறக்குமதிக் கொள்கையில் அரசாங்கம் செய்துள்ள மாற்றம் உள்நாட்டில் உற்பத்தியைப் பாதிக்கச்செய்யும் என்பதை இப்போது காணிவிவசாய அமைச்சு உணர்ந்துகொண்டதாகத் தோன்றுகிறது

வெங்காயம், செத்தல் மிளகாய், கடலை மற்றும் உபஉணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உபஉணவுப் பொருள்களின்விலை வெகுவாகக் குறைந்துள்ளது உண்மை.

ஆனால் விவசாயிகள் இனியும் உப உணவுச் செய்கையில் ஈடுபடுவார்களா என்பதுதான் கேள்வி.

எனவேதான் உபஉணவுப் பொருள்களின் இறக்குமதி சம்பந்தமாக அரசாங்கம் தனதுகொள்கையைமறுபரிசிலனை செய்யவேண்டுமென்று நாம் முன்னரும் எடுத்துச் சொன்னோம்; இன்று மீண்டும் வலியுறுத்துகிறோம்.

---

### மணிவாக்கு

மற்றவர்களை நம்பாமல் உன்னையே நம்பு; உன் முயற்சியையே நம்பு; தன்னம்பிக்கைதான் உண்மையான மகிழ்ச்சியைத் தருவது.

...மனு

### மகாராஷ்டிர நெருக்கடி

# "அரசு மீது நம்பிக்கையில்லை" திங்களன்று பிரேரணை வருகிறது

## 177 பேர் ஆதரவு உண்டு -- ஜனதா அறிவிப்பு

## புதுடில்லியில் இந்திரா ஆலோசனை

புதுடில்லி, ஜூலை 14

மகாராஷ்டிரமாநிலத்தில் காங்கிரஸ் கூட்டரசாங்கத்தில் இருந்து வெளியேறிய உறுப்பினர்ளின் உதவியுடன் ஜனதா கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்பு உண்டு என்று ஜனதா கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதே வேளை, மகாராஷ்டிர சட்ட சபையில் எதிர்வரும் திங்கட்கிழமை ஆட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் பட விருக்கிறது.

**ஜனதா அறிவிப்பு**

இம்மாநிலத்தில் 288 ஸ்தானங்கள் சட்டசபையில் உள்ளன. இதில் 177 உறுப்பினர்கள் ஆதரவு தமக்கு உண்டென்று ஜனதா நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க, இம் மாநில அரசில் புதிதாகத் தோன்றியுள்ள நெருக்கடி குறித்து நேற்று திருமதி இந்திரா காந்தி புதுடில்லியில் ஆலோசனை நடத்தினர்.

இதேநேரம் தமது பதவியை ராஜினமாச் செய்த 4 அமைச்சர்களும் ஏனைய மகாராஷ்டிர சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கள் 38 பேரும் பம்பாயில் கூடி ஆராய்ந்தனர்.

இக்கூட்டத்தில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்திரா காங்கிரஸுடன் உத்தியோக பூர்வகாங்கிரசை இணைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டே தாம் ராஜினமாச் செய்ததாக கூட்டரசாங்க அமைச்சர்கள் நால்வரும் தெரிவித்துள்ளனர்.

இம்மாநிலத்தில் இந்திரா காங்கிரஸும் உத்தியோக பூர்வ காங்கிரஸும் கூட்டாக ஆட்சி அமைத்தது. (உ)

### மே. ஜெர்மனிக்கு

## கார்ட்டர் விஜயம்

வாஷிங்டன், ஜூலை 14

அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் மேற்கு ஜெர்மனிக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

ஜனதிபதிபாகப் பதவியேற்றபின் மேற்கு ஜெர்மனிக்கு திரு. கார்ட்டர் விஜயம் செய்துள்ளது இதுவே முதல் தடவையாகும்.

மேற்கு ஜெர்மனி ஜனதிபதியுடன் பரஸ்பர நல்லுறவு சர்வதேச விவகாரங்கள் என்பன பற்றி அவர் பேச்சு வார்த்தை நடத்துவார். (உ)

### படித்த வாலிபர் பிரச்னை:

## சிறுகடைகள் நிறுவி தமிழக அரசு உதவும்

சென்னை, ஜூலை 14

"வேலையில்லாத இளைஞர்களுக்கு சிறுகடைகள் அமைத்துக்கொடுப்பதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுபோக்க முடியும்" என்று தமிழ்நாடு சமூக நலத் துறை அமைச்சர் செல்வி பி. ரி. செல்வநி கூறினர்.

சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

படித்த வாலிபர்க்கு இவ்வகையில் உதவ அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் சொன்னர். (உ)



## "பிராணிகளிடத்தும் நேசம் காட்டவேண்டும்"

### பச்சையப்பன் கல்லூரி அதிபர் அறிவுரை

சென்னை, ஜூலை 14

"பகுத்தறிவு பெற்ற மனிதர்கள் தம்மை ஒத்த மற்ற மனிதர்களை எவ்விதம் நேசிக்கிறர்களோ அதேபோல் பிராணிகள் மீதும் நேசம் கருணை காட்ட வேண்டும்."

இவ்வாறு சென்னை பச்சையப்பறன்கல்லூரிஅதிபர் திரு. சண்முகநாதன் சென்னையில் நடைபெற்ற பிராணிகள் வதைத்தடுப்புச் சங்கத்தின் நூற்றண்டுவிழாவில் பேசுகையில் கூறினர்.

### சிறந்த நடிகர், நடிகைகள்:

# ஆண்டுதோறும்கௌரவித்து பரிசளிக்கதமிழக அரசுமுடிவு

சென்னை, ஜூலை 14

தமிழ்ப்படங்களில் சிறந்த நடிகர், சிறந்த நடிகைகளைத் தெரிவுசெய்து ஆண்டுதோறும் கௌரவித்துப் பரிசளிப்பதென தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

முழுநீளப் படம், குழந்தைகளுக்கான படம், செய்திப் படங்கள் என்பனவற்றிற்கும் அரசு பரிசளிக்கவுள்ளது.

கலைச்சிறப்பு மிக்க படங்களுக்கும், தொழில் நுட்ப நுணுக்கங்களில் சிறந்தோருக்கும் அரசு பரிசளிக்கும்.

சிறந்தநடிகர் நடிகைகளுக்கு தலா 50,000 ரூபாவும் பொற்பதக்கமும் வழங்கப்படும்.

சிறந்த தயாரிப்பாளர், இயக்குநர், ஆண் பின்னணிப் பாடகர் பெண் பின்னணிப் பாடகர் ஆகியோருக்கும் அரசு பரிசுவழங்கும்.

சிறந்த தமிழ்ப்படத்துக்கு 50,000 ரூபாவும் பொற்பதக்கமும் சிறந்த குழந்தைகள் படத்துக்கு 30,000 ரூபாவும் வெள்ளிப்பதக்கமும், சிறந்த செய்திப்படத்துக்கு 20,000 ரூபாவும் வெள்ளிப்பதக்கமும் வழங்கப்படும்.

இத்தகவலைத் தமிழக அரசின் பத்திரிகைக் குறிப்பு வெளியிட்டது. (உ)

### அரசுக்கு எதிரான பிரசாரம்:

# ரஷ்யா மேலும் இருவருக்கு கடூழியச் சிறை விதித்தது

## யு. எஸ். கருத்து வேறுபாடு

லண்டன், ஜூலை,24

அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுலட்ட குற்றச்சாட்டின் பேரில் சோவியத்யூனியன் மேலும் இருவருக்குத் தண்டனை விதித்துள்ளது.

கின்ஸ்பேக் என்பவருக்கு 8 வருடக் கடூழியச் சிறையும் சரான்ஸ்கி என்பருவக்கு 15 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. மற்றொருவருக்கு 15 வருடக் கடூழியச் சிறையும் நடமாட்டக்கட்டுப்பாடும் விதிக்கப்பட்டு விட்டது.

இத்தண்டனை விதிப்புசோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் புதிய கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

ஹெல்சிங்கியில்பிரகடனம்செய்யப்பட்டமனித உரிமைகளை இதுமீறுவதாக அமைகிறது. எனகுற்றஞ் சாட்டப்பட்டது.

இதேவேளை லண்டன் செல்லவிருந்த சோவியத்யூனியன் எரிபொருள் அமைச்சரின் வருகையை பின்போடுமாறு பிரிட்டிஷ்அரசு கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## இலங்கை-பங்களாதேஷ் வர்த்தக ஒத்துழைப்பு

(கொழும்பு)

பங்களாதேஷ் வர்த்தக அமைச்சர் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

அவர் நேற்றிரவு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெவர்த்தனவைச் சந்தித்து உரையாடினர்.

பரஸ்பர நட்புறவு, பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்பு என்பன பற்றி இவ்வுரையாடல் இடம்பெற்ற

(6-ம் பக்கம் பார்க்க)



★ ஹிந்தி திணிப்பு

★ மத்திய-மாநிலஉறவு

# எம். ஜி. ஆர். தலைமையில்தென்மாநில முதல்வர்கள் நாளை ஆராய்வர்

## முக்கிய தீர்மானங்கள்பற்றி முடிவெடுக்கப்படும்

சென்னை, ஜூலை 14

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஏற்பாடு செய்துள்ள தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு எதிர்வரும் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெறவிருக்கிறது.

மாநிலங்களில் மொழி உபயோகம், மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான சுமுக உறவு என்பன பற்றி இம் மாநாட்டில் ஆராயப்படும்.

ஹிந்திமொழித் திணிப்பை எதிர்க்கும் வகையில் திரு. எம். ஜி. ஆரின் இம்மாநாடு ஏற்பாடு அமைந்துள்ளது.

தமிழ்நாடு மாநிலம் உட்பட தென்மாநிலங்களான கேரள, கர்நாடக, ஆந்திர முதலமைச்சர்கள் இம்மாநாட்டில் கலந்து சொள்கின்றனர்.

மொழி உபயோகம் சம்பந்தப்பட்ட மிக முக்கிய தீர்மானங்கள் இம்மாநாட்டில் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. (உ)

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
அசோகன்
**ராமன் தேடிய சீதை**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
**நினைத்ததை முடிப்பவன்**

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 5 Shows
Peter Fonda,
DIAMOND MERCENARIES

## சமாதானநீதவான்

(வேலணை)

வேலணை கிழக்கு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரெத்தினம் யாழ். மாவட்ட சமாதான நீதவாஞக யாழ். நீதிமன்ற நீதிபதி கே. வி. நவரத்தினம் முன்னிலையில் சமாதான நீதவாஞக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

இளைப்பாறிய தலைமையாசிரியரும் வேலணை ப.நோ.கூ. சங்கத்தின் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தீவுப்பகுதியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவருமான இவர் யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாசத்தின் முன்னுள் தஞதிகாரியாகவும் வடமாகாண ஆசிரியர் சங்க தீவுப்பகுதிகிளையின் முன்னுள் உபதலைவராகவும் தீவுப்பகுதி சனசமூகநிலைய சமாசத்தின் முன்னுள் தலைவராவும் கடமையாற்றிஞர்.

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
ஜெய் - மேஜர் - ரங்கராவ் - A.V.M.ராஜன் - பிரமிளா
**அன்புச் சகோதரர்கள்** (புதியபிரதி)
17-7-78 Alfred Hitchcock's
FOREIGN CORRESPONDENCE

2-வது வெற்றி வாரம்
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லக்ஷ்மி - நாகேஷ் - மனேகர்
நடித்த
கே. பாலசந்தரின்
**நூற்றுக்கு நூறு**
(புதிய பிரதி)
ஒவ்வொரு ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவ மாணவிகளும் நிச்சயம் பார்க்கவேண்டிய படம்.

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ் சாவித்திரி
**மஞ்சள் மகிமை**

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
**மதனமாளிகை**

**REGAL** Jaffna
Daily at 4-45, 7- & 9-30 P. M. only.
Burt Reynolds in
"Nickelodeon"
color (Comedy)

**மனேகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
(புத்தம் புதிய பிரதி)
**அன்னமிட்டகை**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
**மன்மத லீலை**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

விமர்சனம்:

## "மன்மத லீலை"

புதுமை, அதில் ஒரு எளிமை; இதுவே அவரது திறமை. அவர் வேறு யாருமல்ல; புரட்சி டைரக்டர் பாலச்சந்தர்தான். பல வெற்றிப் படைப்புகளின் பின் தோன்றல்தான் "மன்மத லீலை" வண்ணப்படம்.

மனிதன் நல்லவன். அவனை, அவனது சூழ்நிலையே கெட்டவனுக மாற்றுகின்றது. அப்பொழுது அவன் தவறுகள் பல செய்கின்றுன். அவனைத் திருத்திவிடுவது அன்பு ஒன்றுதான்' அன்பால் எதையும் சாதித்துவிடலாம் என்பது போதனை.

ஒவ்வொரு குடும்பங்களிலும் ஒளிவு மறைவு உண்டு. அது சுவர்களது 'வீக்னஸ்' நான்கு அவருக்குள் அடக்கப்பட்டுவிடுகின்றது. இங்கு வலையில் சிக்கியவன் ஒரு நவீன மன்மதன் மது. அவன் வேறுயாருமல்ல, 'மன்மதலீலை' வண்ணப்படத்தின் கதாநாயகன்தான்.

திருமணமானவன்; இவனுக்கு இப்படி ஒரு ஆசையா? ரேகாதான் மதுவின் மனைவி. இடையே ஒரு ஐயர் ஒரு தொல்லை. டெலிபோன்மணி ...அட அட ராங்நம்பர்! அவளின் குரல் டெலிபோனில் இனிக்குதே... நேரிலே எப்படி இருப்பாள்? அஞ்சு என் நெஞ்சு ஏன் உன்னைக் காணும் பொழுதெல்லாம் லபக் லபக் என்று அடிக்கின்றதோ தெரியவில்லை! இப்படியே தொடர்புகள்... முடிவில் மிஸ் கண்ணகி கொஞ்சம் அழகிதான். "நோ ரைம் மிஸ்டர் ஐயர், அவள் மார்பிலே ஒரு மச்சம்... உமக்கும் தெரியுமா?" இப்படி பல விறுவிறுப்பான காட்சிகள் கதை-புரிந்தவர்களுக்கு அறிவுரை புரியாதவர்களுக்கு ஒரு பொழுது போக்கு.

--சிலோன் சந்திரன்

"அபிவிருத்தித் திட்டங்களில்

## கிராம மக்கள் பங்கேற்க வேண்டும்"

(நெல்லியடி)

"கிராமங்களே நாட்டின் முதுகெலும்புபோன்றவை. நாட்டின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் கிராம மக்களும் பங்கு கொள்ள வேண்டும் என்ற ஜனநாயக நோக்குடனேயே இன்றைய அரசாங்கம் கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜ உத்தியோகத்தர்களில் ஒருவர் பகுதி உதவி அரசாங்க அதிபரது பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள்பற்றிய ஆலோசனை கூறும் இணைப்பு உத்தியோகத்தராக விளங்கக்கூடியவகையில் வாய்ப்பினை அளிக்க அரசு எண்ணியுள்ளது."

இவ்வாறு சட்டத்தரணி திரு. சி. செல்லையா தலைமையில் நடைபெற்ற கரவெட்டி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்பு கூட்டத்தில் உரையாற்றுகையில், வடமராட்சி தெற்கு - மேற்கு உதவி அரசாங்க அதிபர் த. குணநாயகம் கூறிஞர்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்க அமைப்புபற்றி கூறிஞர்.

பின்வருவோர் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்- திரு. க. கந்தசாமி, தலைவர்- சி. செல்லையா, உப தலைவர்- திரு. வே. சண்முகசுந்தரம், செயலாளர்- செல்வன் க. வாணிதாசன், உப செயலாளர்- திரு. இராசையா, பொருளாளர்- செல்வன் சு. அருந்தவராஜா. ஆறுபேர் கொண்ட செயற்குழுவுடன் ஒரு கணக்காய்வாளரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (உ)

"சனசமூகநிலையங்கள்

## இளைஞர்களை நல்வழியில் திசைதிருப்ப வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"தற்போதய இளைஞர்கள் வேலைவாய்ப்பு இன்மையால் சமூகத்திற்கு ஒவ்வாத செயல்களில் ஈடுபடுகின்ருர்கள். இதனுல் ஏனைய இளைஞர்களும் தீயவழியிலேயே வழிநடாத்தப்படுகின்ருர்கள். இவ்விளைஞர்களைப் புதியதுறையில் திசைதிருப்பி நல்ல விடயங்களைப் புகட்டவும் செயல்படுத்தவும் சனசமூக நிலையங்கள் முன்வரவேண்டும் இம்முயற்சியில் இந்நிலையா கொண்டுள்ளபணி மகத்தனது சுற்றுப்போட்டி மூலம் இப்பணி சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. இம்முயற்சியை சிறப்பாக நடாத்தி முடித்த செயலாளர் திரு. ம.ஜெகநாதன் பாராட்டப்படவேண்டியவர் என்று யாழ். மாவட்ட சனசமூக நிலைய உத்தியோகத்தர் திரு. வ. கிருஷ்ணசாமி பேசுகையில் கூறிஞர்.

வயவேிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் கடந்த பதினெரு நாட்களாக மின்னெளியில் நடாத்திவந்த கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்வடமாகாணத்தில் இருந்து 64 கழகங்கள் கலந்து கொண்டன. இப்போட்டியின் இறுதிப்போட்டியிலும் பரிசளிப்பு விழாவிலும் திரு. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேலும் பேசுகையில் நிலையக்கழகவீரர்களிடையே கட்டுப்பாடு, ஒழுக்கம், ஒழுங்கு, சகிப்புத்தன்மை கூட்டுறவு ஆகியவற்றை வளர்க்க நிலையம் எடுத்துக்கொண்ட இம்முயற்சி பாராட்டத்தக்கது. உதைபந்தாட்ட கரபந்தாட்டப் போட்டிகள் மேலும் சிறப்படையவும் நிலையத்தின் பணி மேன்மையடையவும் இவ்வூர் மக்கள் இளைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்ருர்.

தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்திஞர் நடந்துமுடிந்த இச்சுற்றுப் போட்டிக்கு கழகங்கள் தந்த ஒத்துழைப்புக்கு நன்றி கூறிஞர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் புன்னலைக்கட்டுவன் அமரர் செல்லப்பா குமாரசாமி மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாளராக இருந்தவர் அன்னுரின் நினைவாக சாம்பியன் கேடயம் பரிசளிக்கப்படுகிறது. அன்னுரின் மகத்தான பணிகளை வருடாவருடம் இந்நிலையம் இச்சுற்றுப்போட்டி மூலம் நினைவுகூருவது சாலப். பொருத்தாமகும் என்ருர்.

நிலையச்செயலாளர் திரு. எம். ஜெகநாதன் பேசுகையில் மாணவர்களும் பெற்ருேர்களும் கல்வியுடன் தாம் முழுவளர்ச்சியடைந்ததாகக் கருதுகிருர்கள் கல்வியுடன் இத்தகைய விளையாட்டுக்களும் போட்டிகளும் சேரும் போதுதான் வளர்ச்சி பூரணத்துவம் பெறுகிறது. தவிர ஆண்களுடன் பெண்களும் சரிசமமாக விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவது நல்லது அதற்குப் பெண்களும் முன்வரவேண்டும் என்ருர். திரு. சுப்பிரமணியம் பரிசில்கள் வழங்கிஞர்.

## தாக்குதல்..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு 1ம் எதிரியை காட்டிஞரென்ருல், ஏன் 2ம் எதிரியையும் காட்டவில்லை என்பதையும் நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

### 2 சுழல் துப்பாக்கிகள்

"இப்பொழுது டாக்டரின் சாட்சியத்திற்குவருவோம். டாக்டரின் சாட்சியத்தின்படி துரையப்பா கோவிலடியில் மரணமாஞர் என்பதில் சந்தேகமில்லை. துரையப்பா, டாக்டரின் சாட்சியத்தின்படி 2 ஆயுதத்தால் சுடப்பட்டுள்ளார். துரையப்பா உடலில் இருந்த சன்னங்களை டாக்டர் எடுத்து இன்ஸ்பெக்டர் ரணசிங்காவிடம் கொடுத்தார். அவர் அதனை ரசாயன பரிசோதகருக்கு அனுப்பியுள்ளார். அவர் சன்னங்களைப் பரிசோதித்தார். 2 சுழல் துப்பாக்கியினுல் வெவ்வேருகச் சுடப்பட்டதாக ரசாயன பரிசோதகர் சாட்சியம் அளித்துள்ளார்.

### இரண்டு பேர் சுட்டனர்

"கோவிலில் 2 பேர் சுழல் துப்பாக்கிகளுடன் நின்ருர்கள் என்பதற்கு சாட்சியம் உண்டு, அதுதான் துரையப்பாவுடன் காரில் வந்த சாரதி சிவனுவின் சாட்சியமாகும். 2 பேர் சுட்டிருக்கிருர்கள்; 2 சூடு, துரையப்பாவின் உடலைத் துளைத்திருக்கிறது. 2 பேர் சுட்டனர். சாட்சியத்தின்படி முன்னுக்கும் பின்னுக்கும் சுடப்பட்டிருக்கிருர்.

"உயரமான ஆள் சுட்டிருக்கவேண்டும் என்றும் அல்லது உயரமான இடத்திலிருந்து சுட்டிருக்கவேண்டுமென்றும் டாக்டர் சாட்சியமளித்திருக்கிருர். அப்போது துரையப்பா நேரான நிலையில் நின்றிருக்கிருர் என்றும் டாக்டரின் சாட்சியம் கூறுகிறது. இதன் அனுமானம் என்னவென்ருல் துரையப்பாவிலும் பார்க்க 2 அடிகூட உயரமானவர் சுட்டிருக்கவேண்டும்; அல்லது உயரமான இடத்தில் நின்று சுட்டிருக்கவேண்டும்.

### சூடுபடும்போது

"சூடுபடும்போது துரையப்பா நின்ற நிலையிலேயே நின்ருர் என்று டாக்டர் சாட்சியத்தில் கூறிஞர். ஆனுல் எந்தச் சாட்சியாவது சூடுபடும்போது துரையப்பா என்ன நிலையில் நின்ருர் என்று கூறவில்லை. துரையப்பா விழுந்தார்; ஓடிஞர் என்று கூறிஞர்களேயொழிய சூடுபடும்போது என்ன நிலையில் இருந்தார் என நேரில் கண்ட சாட்சிகள் எவரும் கூறவில்லை.

"திடீரென எதிரிலே துப்பாக்கி மனிதர்களை துரையப்பா கண்டதும் வளையாது, குனியாது, நேராக நெஞ்சை நிமிர்த்திய நிலையில் நின்ருர் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா: நம்புகின்றீர்களா?

"சாதாரணமான ஒரு மனிதனுக்கு இப்படியான நிலைமை ஏறபட்டால், எப்படியான எதிர்நிலை ஏற்படும் என்பதை நினைத்துப்பாருங்கள். நிமிர்ந்துகொண்டா நிற்பார்கள். அதுவும் துப்பாக்கியுடன் வருபவர்களைக் கண்ட பின்பும் அதே இடத்தில் நிமிர்ந்தா நிற்பார்கள்? குனியமாட்டார்களா? கூனமாட்டார்களா? குறுகமாட்டார்களா? அந்த நிலையில் என்ன செய்வார்கள் என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டும் (க)

# விவசாயிகளுக்கு பென்சன் வழங்க அரசு திட்டம்

## ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார்

[கொழும்பு]

விவசாயிகளுக்குப் பென்ஷன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது பற்றிய விபரங்களை ஜனாதிபதி திரு. ஜே, ஆர், ஜெயவர்த்தன விரைவில் அறிவிப்பார் என்று தெரிய வந்துள்ளது.

இத்திட்டத்தின்படி நெற்செய்கையில் ஈடுபட்டு அரசுக்கு நெல்லை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கே முதலில் பென்ஷன் வழங்கப்படுமென்றும் தெரிய வந்துள்ளது.

அரசுக்கு நெல்லை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு வழங்கும் பணத்திலிருந்து ஒரு சிறு தொகையை பென்ஷனுக்காக கழிக்கவும் அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. (ம-இ)

## அளவெட்டியில் ரூ.10லட்சம் செலவில் மின்தறி ஆலை

(பண்டத்தரிப்பு)

பத்து லட்சம் ரூபா செலவில் அளவெட்டியில் மின்தறி ஆலை ஒன்றை நிறுவுவதற்கு அளவெட்டி - மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது சங்கக் காரியாலயம் இருக்கும் இடத்தில் இந்த மின்தறி ஆலையை நிறுவுதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

செக்கோஸ்லாவாகிய தனியார் நிறுவனமொன்றிலிருந்து மின்தறி ஆலைக்கான இயந்திரங்களை கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தமொன்றும் செய்யப்பட்டுள்ளதாக அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் தெரிவித்தார்.

## யாழ். ரயில் நிலையத்தில் அடிக்கடி மின்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரயில்வேநிலையத்தில் மின்சாரம் தடைப்படுவது பிரயாணிகளுக்கு பெரும் இடைஞ்சலை ஏற்படுத்துகின்றது.

ரயில் நிலையத்தில் இப்பொழுதெல்லாம் மின்சாரம் முழுமையாக தடைப்படாமல் போனாலும் சிலசமயங்களில் பகுதியாகத்தடை ஏற்படுகிறதாம்.

மின்சாரம் தடைப்படும் சமயங்களில் தற்காலிகமாக பயன்படுத்தபடும் 'பெட்ரோமாக்ஸ்' போன்ற வசதிகளோ, வேறு ஏற்பாடுகளோ இல்லையென்று தெரிகிறது.

ரயில் நிலையத்தில் ஏற்படும் மின்சாரத்தடை பிரயாணிகளுக்கு மாத்திரமின்றி ரயில் ஊழியர்களுக்கும் கூட இடைஞ்சலையே ஏற்படுத்துகின்றது. டிக்கட் வழங்குவது, பரிசோதனை நடத்துவது, கணக்குப் பார்ப்பது போன்ற வேலைகள் தடைப்படுகின்றன.

வடபகுதியில் பிரதான ரயில் நிலையமாகவும், தினம் 20 ஆயிரம் ரூபாய்க்குமேல் கட்டணம் வசூலாகும் நிலையமாகவும் விளங்கும் யாழ். ரயில் நிலையத்தில் மின்சாரம் தடைப்படும் சமயங்களில் மாற்று ஏற்பாடுகள் இல்லையென ரயில் நிலைய அதிகாரி ஒருவர் கூறினர்.

## தமிழ்க்காங்கிரஸ் கொழும்புக் கிளை தீர்மானம்

[கொழும்பு]

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரஸ் சார்பில் வேட்பாளர்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்க்காங்கிரஸ் கமிட்டியை தமிழ்க்காங்கிரஸ் கொழும்புக் கிளை கோரியுள்ளது-

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் இல்லத்தில் திரு. வி. இராசநாயகம் தலைமையில் கொழும்புக்கிளை கூடியது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய உத்தேச அரசியல் அமைப்புத்திட்ட வரைவினல், தமிழினத்திற்கு ஏற்படவிருக்கும் விளைவுகளை ஆராய்ந்து கட்சியின் நிலையினை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ்க்காங்கிரஸ் கமிட்டியை கோரும் தீர்மானமும் நிறைவேறியது. [சு]

## காமராஜர் பிறந்தநாள் இன்று

சென்னை, ஜூலை 14

கர்மவீரர் காமராஜரின் பிறந்த தினத்தையொட்டி தமிழகத்தில் இன்று மாபெரும் விழா எடுக்க தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது.

காமராஜர் சென்னையில் வாழ்ந்த இல்லம் பொதுமக்களுக்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனல் இன்று அர்ப்பணம்செய்யப்படும். (இ)

## இலங்கை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகத்தெரிகிறது.

பங்களாதேஷ் அமைச்சர், வெளிநாட்டமைச்சர் ஜனப் ஹமீத், வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி ஆகியோரையும் சந்திப்பார். (உ)

## இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பொன்விழாவை யொட்டி யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான நாடகப்போட்டி விழா இன்று மாலை மேற்படி வித்தியாலய அரங்கில் நடைபெறுகின்றது.

●

வலிகாமம் கிழக்கு இளம் விவசாயிகள் கழகங்களின் வருடாந்தவிழாவும், பொருட்காட்சியும் இன்று மாலை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறுகின்றது-

பொருட்காட்சியை யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க அதிபர் திரு. நா.சிவமுத்துலிங்கம் திறந்துவைக்கிறார். பிரதம விருந்தினராக கோப்பாய் எம். பி. திரு. எஸ், கதிரவேலுப்பிள்ளை கலந்து கொள்கிறார்.

"விவசாயமா? உத்தியோகமா?" என்றதலைப்பில் பட்டிமன்றமும்; "பட்டதாரி விவசாயம் செய்கிறார்" 'ஏமாற்றம்' "அப்பு மாப்பிள்ளை தேடுகிறார்" ஆகிய நாடகங்களும் மேடையேறுகின்றன.

ஃ ஃ

வரணியூரான் குழுவினர் மேடையேற்றும் "அசட்டு மாப்பிளை" என்ற நகைச் நாடகம் இன்று மாலை வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்படுகின்றது. [கெ-இ]

## கற்பிட்டி தீவிபத்து;

# உடன் நிவாரணம்: அமைச்சர் உறுதி

[கற்பிட்டி]

கற்பிட்டிப் பகுதியில் சமீபத்தில் இடம்பெற்ற தீவிபத்தில் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு உடன் நிவாரணம் வழங்கப்படுமென்று கடற்றெழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா உறுதியளித்தார்,

பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு 2 வார பங்கீட்டுப் பொருள் பெறுவதற்கு 30 ரூபாவும் அத்தியாவசியப் பொருள் பெறுவதற்கு 50 ரூபாவும் கொடுத்து சமூக சேவைகள் இலாகா உதவுகிறது. மீனவருக்கு உபகரணங்களை சலுகை அடிப்படையில் வழங்கவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

மேற்படி தீ விபத்தில் 60 வீடுகளும் வாடிகளும் தீக்கிரையாகின என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## அரிசி உணவு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளாதாரத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டும்.

### சிங்களத்தில் பாண் என்ற சொல்லே இல்லை

சிங்களத்தில் பாண் என்றே சொல்லே கிடையாது. இது ஒரு போர்த்துக்கீச சொல்.

கடந்த ஆட்சிக்காலத்தில் 74ம் ஆண்டு அரசு மாவை ருத்தல் 98 சதத்துக்கு வாங்கி 1-10 சதத்துக்கு பூச்சிபுழுக்களுடன் சேர்த்து விற்பனை செய்து மக்களை சுரண்டியது

75ம் ஆண்டு தேர்தல் அண்மித்தமையினல் 92 சதத்துக்கு வாங்கி 86 சதத்திற்கு விற்றார்கள்.

### நாம் பதவிக்கு வந்தபோது . . .

நாம் பதவிக்கு வந்தபோது 79 சதத்துக்கு வாங்கி 60 சதத்துக்கு விற்றதனல் 19 சதம் நஷ்டம் ஏற்பட்டது.

### 120 கோடி இழப்பு

இப்போது ஒரு ருத்தல் மாவை 1-80 சதத்துக்கு கொள்வளவு செய்து மக்களுக்கு 80 சதத்துக்கு மான்யவிலையில் விநியோகம் செய்கிறோம். இதனல் வருடாந்தம் 120 கோடி நஷ்டம் ஏற்படுகிறது. இந்த இழப்பு தவிர்க்கப்படுமானல் 120 கோடிரூபாவைக் கொண்டு எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பலாம். (ம-இ)

## துப்பாக்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வானைவிட்டுச் சென்றனர் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனப் மிஸ்கின் மேற்கொண்டு வருகிறார். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (இ)

## 72 பேர் அனுமதி

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் அனுமதி பெறும் மாணவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ். வளாக மருத்துவ பீடத்தில் அனுமதி பெறும் 72 மாணவர்களுக்கான அனுமதிப்பத்திரங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ். வளாக திருநெல்வேலிப் பிரிவில் உள்ள விளம்பரப் பலகையிலும் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

## தலைவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனுக்கள் அனுப்பப்பட்டிருந்தன. பொதுச்சபையின் ஆறு உறுப்பினர்கள் இப்பதவிகளுக்கு மனுச்செய்வோரைச் சிபார்சு செய்யவேண்டுமென்பது புதிய அமைப்பு 'விதிகளில் ஒன்று எனத் தெரியவருகிறது. இதற்கேற்ப தலைவர் பதவிக்கு திரு. எம். சிவசிதம்பரத்தின் பெயரும், செயலாளாநர்யகத்தின் பதவிக்கு திரு. அ. அமிர்தலிங்கத்தின் பெயரும் பொதுச்சபை உறுப்பினர் அறுவரால் பிரேரித்து அனுவதிக்கப்பட்டு உரியகாலத்தில் அனுப்பட்பட்டிருந்தன.

ஆனல் கடைசி நேரத்தில் முன்னள் உடுப்பிட்டி எம்.பி. யான திரு.கே. ஜெயக்கொடியின்பெயர் தலைவர் பதவிக்காகச் சில கிளைகளால் அனுப்பப்பட்டிருந்தாலும் பொதுச்சபை உறுப்பினர் அறுவரில் ஐந்துபேர்தான் பிரேரித்து அனுவதித்ததாகவும் ஒருவர் பொதுச்சபை உறுப்பினர் அல்லாதவர் என்றும் இதனல் திரு. ஜெயக்கொடியின் தலைவர் பதவிக்கான மனுசெல்லுபடியாகாதென்று நிராகரிக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

கூட்டணியின் உபதலைவர் பதவிக்கு மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ. இராசதுரையும், பொருளாளர் பதவிக்கு திரு. எஸ்.கதிரவேலுப்பிள்ளையும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படலாமென்றும் அறியப்படுகிறது.

## பொருட்காட்சி

[சித்தன்கேணி]

சித்தன்கேணி இளம் விவசாயிகள் கழகத்தின் பொருட்காட்சி சித்தன்கேணி மாதர் சங்க மண்டபத்தில் இன்று 2வது நாளாக நடைபெறுகிறது.

நாளை மாலை கழகத்தின் 2வது ஆண்டுவிழா நடைபெறும். (இ)

## சங்காபிஷேகம் நாளை

[யாழ்ப்பாணம்]

யாழ், வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் மகாசங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறம்.

(நேற்றைய "ஈழநாடு" இதழில் 16-ந் திகதி புதன்கிழமை என வெளியிடப்பட்டது தவருகும்.) (ஆ-ர்)

## வெங்காயக் கொள்வனவு:

# யாழ்ப்பாணத்தில் மேலும் களஞ்சியங்கள் நிறுவ முடிவு

(கொழும்பு)

வெங்காயத்தைக் கொள்வனவு செய்துவைக்கும்பொருட்டு யாழ்ப்பாணத்தில்மேலும் களஞ்சியங்களை அமைக்க விவசாய அபிவிருத்தித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் சின்ன வெங்காயம் அந்தர் ஒன்று 100 ரூபா முதல் 110 ரூபா வரை விற்கப்படுகிறதாம். விவசாய அபிவிருத்தித் திணைக்களம் வெங்காயத்தை 90ரூபா வீதம் கொள்வனவு செய்துள்ளது.

வெங்காய அறுவடை காலம் ஆரம்பமாகிவிட்டதால் விசேட திட்டம் ஒன்றினை இத்திணைக்களம் வகுத்துள்ளது.

ஒரு இருத்தல் வெங்காயத்தை ஒரு ரூபா வீதம் இத்திணைக்களம் விநியோகிக்கும். (உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Ealanaadu-Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka